உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 5 வியாழக்கிழமை (20-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:167

சிங்கப்பூர் ஹொட்டலில் புலிகளுடன் ரணில் பேச்சு?

கொழும்பு,ஜுலை20

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜுன் 18ஆம் திகதி சிங்கப்பூரில் உள்ள 'கொன் ராக்ட்' என்ற ஹோட்டலில் வைத்து விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்களுடன் நேரடிப் பேச்சு நடத்தியுள்ளார்.

அரசசார்பு ஏரிக்கரைப் பத்திரிகையான 'தினமின' சிங்கள் இதழ் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றது.

புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக கடந்த ஜுன் 15ஆம் திகதி ரணில் குழுவினர் அவசர அவசரமாக சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றனர். ஜுன் 18 ஆம் திகதி சந்திப்பு நடந்தது. ரணிலுடன் மலிக்சமரவீர, அருச்சுன மகேந்திரன், லலித் பொன்னாண்டோ ஆகியோர் பேச்சுகளில் பங்குபற்றினர்.

புலிகளின் கப்பல் போக்வரத்துக்குப் பொறுப்பான உயர்மட்டத் தலைவரான ஞானக்கோன் என்பவருடனேயே இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

உத்தேச அரசமைப்புச் சீர்திருத்த முயற்சியாக ஐ.தே. கட்சியுடன் இலங்கை அரசு பேச்சு நடத்திக்கொண்டிருந்த சமயமே இடையில் ரணில் விக்கிரமசிங்க

(12ஆம் பக்கம் பார்க்க)

மறுக்கின்றார் ரணில்

கொழும்பு,ஜுலை20

தான் சிங்கப்பூரில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவித்து அரசு சார்பு சிங்களப் பத்திரிகையில் வெளியான செய்திகளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடியோடு மறுத்துள்ளார்.

நேற்று ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இந்த மறுப்பை வெளியிட்டார்.

"நான் புலிகளுடன் எந்தவிதப் பேச்சுக்களையும் நடத்த வில்லை.

"அவ்வாறு புலிகளுடன் பேசும் சந்தர்ப்பம் வந்தால் நாம் பகிரங்கமாகவே அதனைச் செய்வோம்.

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகப் புலிகளுடன் பேச்சுநடத்த முன்வருமாறு கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னரே நான் அரசாங்கத்தைக் கோரினேன். இந்தக் கோரிக்கையைக்கூட பகிரங்கமாகவே விடுத்தேன். ஆனால

(12ஆம் பக்கம் பார்க்க)

சமாதான முயற்சிகளை நோர்வே இடைநிறுத்தியது?

கொழும்பு,ஜுலை20

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவந்த நோர்வே அரசு அந்த முயற்சிகளை இடைநிறுத்தியிருப்பதாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரக வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

"இலங்கையில் ஆட்சியிலிருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இப்போது பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலேயே அதிக ஈடுபாடு காட்டுகின்றன. அதனால் பேச்சுக்கான சமாதான முயற்சிகளை இடை நிறுத்தியுள்ளோம்" - இப்படி அந்தத் தூதரக அதிகாரி தெரிவித்தார் என்று அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

ஒன்பது படையினர் காயம்!

கொழும்பு,ஜுலை20

திருகோணமலை மாவட்டம் கல்லாறுப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் படையினர் பயணமசெய்த வாகனம் ஒன்று கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கானதாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் படையினர் தரப்பில் 9பேர் காயமடைந்தனர் எனவும் -

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

கிணற்றில் எலும்புக்கூடு

வவுனியா,ஜுலை20

கிளிநொச்சியில் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் விநாயகர் ஆலயத்துக்கு அருகிலுள்ள - ஒரு கிணற்றில் இருந்து மனித எலும்புக் கூடு ஒன்று நேற்றுக்காலை மீட்கப்பட்டிருக்கிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

நகரசபை தொழிலாளி கடத்தல்

வவுனியா,ஜுலை20

வவுனியா நகரசபையின் நகர சுத்தித் தொழிலாளரான சண்முகம் கிருஷ்ணமூர்த்தி என்பவர் நேற்றுக் காலை நகர சுத்திகரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த சமயம் ஓட்டோவில் வந்த ஒருசிலரால் கைது செய்யப்பட்டு கூட்டிச் செல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

கடமையில் இருந்த ஊழியர் கடத்தப்பட்டது குறித்து நகரசபைச் செயலாளர் வவுனியா பொலீஸ் அத்தியட்சகர், அரச அதிபர், படை அதிகாரிகள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

(உ-164)

சடலம் ஒப்படைப்பு

வடமராட்சி,ஜுலை20

கரணவாய் மணியகாரன் பகுதியில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் - சுமார் 30 வயது மதிக்கத்தக்க - இளைஞனின் சடலம் நெல்லியடிப் பொலீஸாரால் நேற்று முற்பகல் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சடலம் நேற்று மாலைவரை அடையாளம் காணப்படவில்லை.

(ஐ-173-117)

ஐ.தே.கவுடனான பேச்சை குழிப்புவதற்கு அரசு திட்டம்!

தலையாழிப் பகுதியில் கைதான மூவரும் இன்று விடுவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம்,ஜுலை20

கடந்த வியாழனன்று யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் கொக்குவில் தலையாழிப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சமயத்தில் அப்பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டதாக கூறப்படும் மூவர் அநேகமாக இன்று காலை விடுவிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மூவரில் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாம கொத்தணித் தலைவர் நா. கணேசன், அதன் பதில் பொது

(12ஆம் பக்கம் பார்க்க)

அரச ஊழியர்கள் மூவர் மட்டக்களப்பில் கைது!

மட்டக்களப்பு,ஜுலை20

மட்டக்களப்பில் அரச ஊழியர்கள் மூவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

மட்டக்களப்பு சமுர்த்தி முகாமையாளரான பாலையா பத்மநாதன் சமுர்த்தி அலுவலகத்தில் வைத்து நேற்றும் -

கொக்கட்டிச்சோலை பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் மகிழடித்தீவு மகாவித்தியாலய அதிபருமான எஸ். அகிலேஸ்வரன்,மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் எஸ்.தியாகராஜா ஆகியோர் நேற்று முன்தினமும்-

கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள்.

கண்டியில் இருந்து வந்த கிளர்ச்சித் தடுப்புப் பொலீஸ் பிரிவு அணியினரே இவர்களைக் கைதுசெய்து கண்டிக்குக் கொண்டுசென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில்

(12ஆம் பக்கம் பார்க்க)

குற்றம் சுமத்துகிறார் ரணில்

கொழும்பு,ஜுலை20

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் தான் நடத்தி வரும் பேச்சுக்களைக் குழப்ப அரசு திட்டமிட்டுள்ளது. அதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக அரசு விஷமப் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது"

- இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"சிங்கப்பூரில் நான் புலிகளுடன் பேச்சு நடத்தியதாகவும், அரசமைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர்கள், எம்.பீக்களுக்கு சுங்கவரி இன்றி சொகுசு கார்!

கொழும்பு,ஜுலை20

அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சொகுசுக் கார்களை சுங்கவரிகள் எதுவுமின்றி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய விரைவில் வசதி செய்யப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டம் அமுலுக்கு வந்தால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே தொலைபேசி, வீடு, உணவு, போக்குவரத்து மற்றும் மெய்க்காப்பாளர் பாதுகாப்பு போன்ற விடயங்களில் பெறும் சலுகைகளுடன் இதுவும் மேலதிக ஒன்றாக இருக்கும்.

இவ்வாறு கொள்வனவு செய்

(12ஆம் பக்கம் பார்க்க)

டாக்டர்கள் பரீட்சைக்குச் செல்வதால்

சத்திர சிகிச்சைகள் தடைப்படும் ஆபத்து!

யாழ்ப்பாணம்,ஜுலை20

யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக அடுத்த வாரம் கொழும்பு செல்லவிருப்பதால் சாதாரண சத்திர சிகிச்சைகளை (Non Urgent Surgeries) செய்யமுடியாத நிலைமை ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர்களுக்கான சிங்கள வாய்மூலப் பரீட்சை மாத இறுதியிலும், ஒகஸ்ட் 7ஆம் திகதியும் கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த 22 டாக்டர்களுக்கு அழைப்பு வந்திருந்தது.

தற்போதைய யுத்தச் சூழ் நிலை போக்குவரத்துப் பிரச்சினை போன்ற பல்வேறு காரணங்களால் தமது பதவி உயர்வு வாய்ப்புக்களையும்

(12ஆம் பக்கம் பார்க்க)

மண்டலங்களின் கூட்டமைப்பு முறையே சிறந்த தீர்வு என்கிறார் சிவசிதம்பரம்

கொழும்பு,ஜுலை20

"மண்டலங்களின் கூட்ட மைப்பு (Union of Territories) என்ற ஆட்சி அமைப்பு முறைக்கு நாட்டை மாற்றுவதே இலங்கை இனப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வாக அமையும்."

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம்.சிவசிதம்பரம் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி சென்னைக்குச் சென்று ஒரு வாரம் தங்கிய பின்னர் நேற்றுக் கொழும்பு திரும்பினார். அவர் அங்கு தம் கட்சித்தலைவர் எம்.சிவசிதம்பரத்துடன் இங்குள்ள அரசியல் நிலைமைகள் குறித்து ஆராய்ந்ததாகத் தெரிவித்தார்.

"மண்டலங்களின் கூட்டமைப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

OLD BOYS' ASSOCIATION OF ST. PATRICK'S COLLEGE

150 ஆவது ஆண்டு நிறைவு, நினைவு அஞ்சல் முத்திரைவெளியீடு

நாளை 21-07-2000 காலை 10 மணிக்கு

கொழும்பில் சுதந்திரசதுக்கத்தில் வெளியிடப்படுகின்றது. அன்றைய தினம் காலை 10 மணிக்கு எமது கல்லூரியிலும் இவ்வெளியீட்டு நிகழ்வு சிறப்பிக்கப்படும். இந்நிகழ்வில் பழைய மாணவர்சங்க அங்கத்தவர்களை கலந்துகொள்ள அதிபர் அழைக்கின்றார்.

பழைய மாணவர் சங்கத்தினால் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி திட்டமிடப்பட்ட அனைத்து நிகழ்வுகளும் இன்றைய சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்படுகின்றது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

- உபசெயலாளர்

பழைய மாணவர் சங்கம்,
59, புனிதபத்திரிசியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(76570)

அரசாங்க அறிவித்தல்

வாகனங்கள் திருத்துநர்களைப் பதிவுசெய்வதற்கான

மீள் அறிவித்தல் - 2000

யாழ்ப்பாணம், சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனைப் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகள், நிறுவனங்களிலுள்ள வாகனங்களின் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தகுதியானவர்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

சகல வகையான வாகனங்களையும் திருத்துவதில் அனுபவமுள்ளவர்கள் எனது பணிமனையில் ரூபா இருபத்து ஐந்தினை (25/-) பதிவுக் கட்டணமாகச் செலுத்தி விண்ணப்பத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து 31-07-2000 வரை தம்மைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வைத்திய கலாநிதி உ.சிவபாதசுந்தரம்,
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.

(C/12271)

31 ஆம் நாள் நினைந்துருகல்

தோற்றம் 15 - 04 - 1936

மறைவு 20 - 06 - 2000

அமரா செல்லர் - கந்தசாமி

தாய்க்கு குலவிளக்காய் அவதரித்து
மனைவிக்கு நற் கணவனாகவும்
பிள்ளைகளுக்கு பாசம்மிகு தந்தையாகவும்விளங்கி
தாங்கொணாத் துயர் தந்து
எம்மைத் தவிக்க விட்டுச் சென்ற
எம் குலவிளக்கின்
ஆத்மா மேன்மை அடைய வேண்டுகின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20-07-2000)வியாழக்கிழமை நடைபெறும். தொடர்ந்து வீட்டில் இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள.

உடுவில் வடக்கு. (76565)

ஸ்ரீசெல்வா சினிமா

யாழ்ப்பாணம்.

தினசரி:- 10-30, 2-00

அருண்பாண்டியன்-ரோஜா நடித்த

இன்ரியென்டன்

(CD பிரதி - புதிய வெளியீடு)

(76579)

ராஜா

(யாழ்ப்பாணம்)

பிரபுதேவா, ரோஜா, சரத்குமார், கபாலி மற்றும் பலர் நடிப்பில் இனிய பாடல்கள் நிறைந்த

இந்து

புதிய நேரம் 10.30, 2.00

24-07-2000 முதல்

கண்ணுக்குள் நிலவு

(C/12268)

நாகம்ஸ்

(சுன்னாகம்)

ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, ரம்யாகிருஷ்ணன் நடிப்பில

படையப்பா

(ரீல்ஸ்)

காட்சிகள்:-
11.00, 2.30
(புதிய நேரம்)

(C/12232)

மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள் வெளிவந்துள்ளன!

- பேராசிரியர் ஜே.கே. பீ. ஆரியரத்னா (இரசாயனவியல் பேராசிரியர் களனிப்பல்கலைக்கழகம்) இரசாயனவியல் பல்தேர்வு வினாக்கள் விடைகளுக்கான விரிவான விளக்கங்களுடன் 1997 இல் இருந்து (ரூபா 200/-)
- திரு. எஸ். கே. பிரபாகரன் – கணக்கியல் – கம்பனிக்கணக்கு (ரூபா 160/-)
- திரு. ஏ. கருணாகரன்–பௌதிகவியல்–சடப்பொருளின் இயல்புகள் (ரூபா 120/-)
- திரு ஏ. கருணாகரன்–பௌதிகவியல்–சடப்பொருளும் சுதீர்ப்புப் (ரூபா 90/-)
- திரு. வே. சண்–பொருளியல் பகுதி II (ரூபா 200/-)
- திரு. எம். மனோகரன்–இந்துநாகரிகம் (ரூபா 120/-)
- திருமதி அம்பிகாதேவி ராஜரட்னம்–சுற்றாடற்கல்வி தரம் 6 (ரூபா 65/-)
- திருமதி அம்பிகாதேவி ராஜரட்னம்–விஞ்ஞானம் தரம் 9 (ரூபா 75/-)
- திருமதி விக்னேஸ்வரி செல்வநாயகம்–தமிழ்மொழி தரம் 7 (ரூபா 55/-)
- திருமதி அம்பிகாதேவி ராஜரட்னம்–கணிதம் தரம் 6 (ரூபா 80/-)

புத்தகங்கள தேவைப்படும் மாணவர்கள காசுக்கட்டளை(Money Order) அனுப்பி வைத்தால் பதிவுத் தபால் மூலம் புத்தகங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும். (தபால் செலவு இலவசம்)

குளோபல் பப்பிளிகேசன்ஸ்,
குளோபல் பிரிண்டர். (பிறை). லிமிற்.
195, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு – 13.
தொலைபேசி: 334557, 478997, 458273
தொலைநகல்: 330588

Global Publications,
Global Printer (Pvt.) Ltd.
195, Wolfendhal Street.
Colombo - 13,
Tel: 334557, 478997, 458273
Fax: 330588
e mail: globje @ sltnet.lk

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:-

சிவன் மாளிகை,

166, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2996

(C/12264)

நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

ஆறாம் மாத நினைவு

திருமதி
கனகம்மா கந்தையா

மலர்வு 1927-11-18 உதிர்வு 2000-02-05

உங்கள நினைவுகள் என்றும்
எம்மை விட்டு நீங்காது!
ஆறாது! தீராது!

சகோதரி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'ஆனந்தவாசம்'
இணுவில் மேற்கு,
சுன்னாகம். (C/12231)

31ஆம் நாள் நினைவு

அமரர்
கந்தையா கருணானந்தன்
(இராசா)

மலர்வு: 1953-06-03 உதிர்வு: 2000-06-20

2000-06-21 ஆம் நாள் அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி நல்கிய உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (2000-07-20) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. விக்கினேஸ்வரதேவி (மனைவி)
பிள்ளைகள், சிறியதாயார்,
சகோதரசகோதரிகள், மாமன், மாமி,
மைத்துனர்கள், மைத்துனிகள்.

'சிவபதி'
தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்: **க. சதானந்தன்** (வவா)
இணுவில் மேற்கு, இணுவில்.

அல்லலுறும் தென்மராட்சி மக்களுக்கு.....

நாளை (21-07-2000) ஈசுரவிநாயகர் தேவஸ்தானத்தில்...
ஈசுர விநாயகரின் முதற்பூஜை வழிபாட்டுடன்
தொடங்கும் (காலை 6.00 - 7.00 மணி) விசேட பூஜைகளும் பிரார்த்தனைகளும்
கைமேற் பலன் அளிக்கட்டும்.

(76550)

சோழியூரான் – பிறைசூடிக்குரு

அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

பெய்ஜிங், ஜூலை 20

ஏவுகணைத் தடுப்புத் திட்டங்களை அமெரிக்கா தொடர்ந்து செயற்படுத்தினால் பலத்த பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று சீனாவும் ரஷ்யாவும் எச்சரித்துள்ளன.

சீனாவுக்கு விஜயம் செய்த ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடினும் சீன அதிபர் ஜியாங் ஜெமினும் கூட்டாக விடுத்த அறிக்கையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(இ-ஒ)

நேபாளத்தில் 200 பெண்கள் கைதாகினர்

காத்மண்டு, ஜூலை 20

நேபாளத் தலைநகரில் நடந்த அழகிப் போட்டிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய 200 பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் போராட்டத்தில் 12 பெண்கள் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்

செல்வந்தர்களின் வக்கிரப் பொழுது போக்கான அழகிப் போட்டிகள் நேபாள கலாசாரத்துக்கும் பாரம்பரியத்துக்கும் எதிரானது என்று இந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

(இ-ஒ)

ஜப்பானியத் தீவில் நிலை கொண்டுள்ள

அமெரிக்கப் படையினருக்கு எதிராக பொதுமக்கள் தீவிர போராட்டம்

பாலியல் வல்லுறவுகளில் ஈடுபடுகின்றனராம்

டோக்கியோ, ஜூலை 20

ஜப்பானின் தெற்குப் பகுதியில் இருக்கும் ஒகினோவா தீவில் உள்ள அமெரிக்க விமானப்படையினர் – 12 வயது பாடசாலை மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியது உட்பட –செய்துவரும் பல குற்றச் செயல்களைக் கண்டித்தும், விமானப்படைத் தளத்தை அகற்றக் கோரியும் அந்தத் தீவு மக்கள் போராட்டம் நடத்துகின்றனர். ஜி. 8. நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள, அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் ஜப்பான் செல்வதால் இந்தப் போராட்டங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

சமீபத்தில்ஒகினோவாதீவில் அமெரிக்க விமானப்படையின் அட்டூழியங்களைக் கண்டித்து நடத்தப்பட்ட பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். சில நாள்கள் கழித்து நடத்தப்பட்ட மனித சங்கிலிப் போராட்டத்தில் படைத் தளத்தைச் சுற்றிவளைத்து சுமார் 10 மைல் தூரத்துக்கு ஒகினோவா மக்கள் கரம் கோர்த்துத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தொடர்ந்து பல ஆண்டுகளாக அமெரிக்கப் படையினரின் கொடிய செயல்களால் துன்புறுத்தப்பட்ட பொது மக்கள் அதிக எழுச்சியுடன் இந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டதாக ஜப்பானியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா தனது கட்டுப்பாட்டிலிருந்த ஒகினோவாத் தீவு 1972 இல் ஜப்பானிடம் திருப்பி ஒப்படைத்தது ஆனால் அங்கு தனது விமானப்படைத் தளம் ஒன்றை அது தொடர்ந்து வைத்திருந்தது

இந்தத்தளத்தில் சுமார் 26, 000 வீரர்கள் தற்போது உள்ளனர்.

இவர்கள் வீடுகளில் உறங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைச் சிறுமிகள் உட்பட பெண்களைத் தூக்கிச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியது உட்பட பல கொடிய செயல்களைச்செய்வது வழக்கமாக உள்ளது

பலஆண்டுகளாகத் தொடரும் இத்தகைய கொடூரங்களுக்கு எதிராக கொதித்தெழுந்த ஒகினோவா மக்கள் தற்போது தமது போராட்டங்களைதீவிரப்படுத்தியுள்ளனர். (இ-3)

உலக சாதனைக்கு முயன்ற சிறுவன் 5விரல்களை இழந்தான்

காத்மண்டு, ஜூலை 20

எவரெஸ்ட்டில் ஏறி உலக சாதனை புரிய முயன்ற சிறுவன் தனது 5 விரல்களை இழந்தான்.

இந்தப் பரிதாபச் சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

நேபாளத்தைச் சேர்ந்த 15 வயதான சிறுவன் தெம்பாஷெரிங் ஷெர்பா சமீபத்தில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் முயற்சியை ஆரம்பித்தான் மலைப்பயணத்தில் சுமார் 8850 மீற்றர் உயரம் வரை ஏறிவிட்ட அவனால் குளிர்மற்றும் பனிதல்காற்று ஆகியவற்றுக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லை எழுமையான தெம்பாவால் விலை உயர்ந்த குளிருக்கான கவசங்களை வாங்க முடியாததாலேயே இந்த நிலை ஏற்பட்டது

இறுதியில் மலை உச்சியை அடைய 22 மீற்றர்கள் தூரமே இருந்த போது உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டதால் தெம்பா தன்முயற்சியைக் கைவிட்டுத் திரும்பினான்.

ஆனாலும் குளிரால் பாதிக்கப்பட்ட அவனது வலது கையின் 5 விரல்களையும் சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் மருத்துவர்கள் அண்டித்துவிட்டனர்.

தெம்பா மலை உச்சி வரை ஏறியிருந்தால் குறைந்த வயதில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த சாதனையைச் செய்திருப்பான்.

தற்போது ஷம்புதமார் என்பவர் 17 வயதில் எவரெஸ்ட் உச்சியைத் தொட்டதே சாதனையாக உள்ளது. (இ-ஒ)

பரம எதிரிகளாக இருந்த

அமெரிக்கா - வியட்நாம் வர்த்தக உடன்படிக்கை

வாஷிங்ரன், ஜூலை 20

பரம எதிரிகளான அமெரிக்காவும் வியட்நாமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டன.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளிடையேயான வர்த்தகத்தை மேம்படுத்தும் ஓர் உடன்படிக்கை ஆகும்.

அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி சார்வின் பிரஷ்பெல்கியும், வியட்நாம் வர்த்தக அமைச்சர் ஷகோனும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின் படி முதலீடுகளை அதிகரித்தல் மற்றும் பொருள் சேவைகளுக்கான வரிகளைக் குறைத்தல மற்றும் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் அமெரிக்கப் பொருள்களுக்கான சந்தை வழியை வியட்நாம் திறந்து விடும்.

கடந்த 1975 ஆம் ஆண்டு வரை இரு நாடுகளிடையே நடைபெற்ற யுத்தத்தில் அமெரிக்க வீரர்கள் 58,000 பேரும், பல லட்சம் வியட்நாமியர்களும் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(இ-ஒ)

அகதிகளை ஏற்றும் படகுகள் மீது தமிழக அதிகாரிகள் கெடுபிடி

கருணாநிதிக்கு மீனவர்கள் மனு

சென்னை, ஜூலை 20

தமிழ்நாட்டிற்கு இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றி வரும் தமிழக மீனவர்களின் படகுகள் மீது அவர்களுள்ள அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதாகவும், இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படியும் தமிழக மீனவர் அமைப்புகள் மனு ஒன்றை முதல்வர் கருணாநிதிக்கு அனுப்பி வைத்துள்ளன.

அகதிகளை ஏற்றி வரும் படகுகளின் உரிமங்களை ரத்துச் செய்வதுடன், அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்வதாகவும், மீனவர்களைக் கைது செய்து துன்புறுத்துவதாகவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இலங்கை அகதிகளை ஏற்றி வரும் மீனவர்கள் முன்னர் கடற்படை அதிகாரிகளிடம் அவர்களைக் கையளித்து வந்தனர்.

ஆனால் அதிகாரிகளின் கெடுபிடிகளால் தற்பொழுது அகதிகளை அதிகாரிகளுக்குத் தெரியாமல் இறக்கிவிட வேண்டிய நிலை மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஒ-5)

நீண்டகாலப் பிரதமர்

கோலாலம்பூர், ஜூலை 20

மலேசியாவில் தனது பதவிக் காலத்தை இருபதாவது ஆண்டிலும் பிரதமர் மகதீர்

மொகமெட் தொடர்கிறார்.

இவரை பதவியிறக்கும் சாத்தியம் அண்மையில் ஏற்படப் போவதில்லை என்று அரசியல் ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

74 வயதான மகதீர், கட்சியில் ஏற்பட்ட பிளவுகள், நெருங்கிய அரசியல் சகாக்களுடன் ஏற்பட்ட மோதல்கள் என்பவற்றைச்சமாளித்து 5 வது 5 ஆண்டு பதவிக் காலத்தை வகிப்பது குறிப்பிடத்தக்கது. (இ-ஒ)

3 கொலைக் குற்றவாளிகளையும் அமெரிக்காவுபடைக்கவேண்டும்

பங்களாதேஷ் கோரிக்கை

டாக்கா, ஜூலை 20

பங்களதேஷின் மதிப்புக்குரிய தலைவர் ஷேக்முஜிபுர் ரஹ்மானின் கொலை தொடர்பான மூன்று குற்றவாளிகளையும் தமது நாட்டிற்குத் திருப்பி அனுப்புமாறு அமெரிக்காவிடம் பங்களாதேஷ் வலியுறுத்தியுள்ளது.

வாஷிங்ரனில் உள்ள பங்களாதேஷ் தூதர் கே. எம். ஷேக் அபுதீன் அமெரிக்க வெளியுறவுத் துறையின் செயற்குழுத் தலைவர் பிரவுன் பாக்கிடம் இந்தக் கோரிக்கையைத் தெரிவித்துள்ளார்.

'பங்களாதேஷின் தந்தை' என்று அந்த நாட்டு மக்களால் மதிக்கப்படும் ஷேக் முஜிபுர் ரஹ்மான் 1975 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடத்த இராணுவப் புரட்சியின் போது அவரது வீட்டில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

இக் கொலைதொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 3 இராணுவ அதிகாரிகளும் தற்போது அமெரிக்காவில் உள்ளனர்.

(ஐ-ஒ)

உளவாளிகளுக்குத் தண்டனை

சீனாவில் தைவானுக்காக உளவு பார்த்த 3 பேரில் ஒருவருக்கு 2 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட மரண தண்டனையும் மற்றைய இருவருக்கும் முறையே ஆயுள் தண்டனை, 15 ஆண்டு சிறை விதிக்கப்பட்டன. (இ-ஒ)

பிஜிக்கு எதிராக நடவடிக்கை

பிஜிக்கான தனது தூதரைத் திருப்பி அழைக்க நியூசிலாந்து முடிவுசெய்துள்ளது. அதே சமயம் ஆஸ்திரேலிய அரசு, பிஜி மீது வர்த்தக மற்றும் பாதுகாப்புத் துறைகள் தொடர்பான தடைகளை விதித்துள்ளது

பிஜி கிளர்ச்சித் தலைவர் ஜோஜஸ் பைட்டின் ஆதரவாளர் ஒருவர் புதிய அமைச்சரவையில் சேர்க்கப்பட்டதும், ஸ்பைட்டின் ஆலோசனைப்படி அதிபர் மற்றும் பிரதமர் தேர்வுகள் நடத்தப்பட்டதும் நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியதாலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது

ஆஸ்திரேலியா, பிஜிக்கான நிதி உதவிகளில் 30 சதவீதத்தைக் குறைக்கவுள்ளது.

அத்துடன் பிஜியின் பாதுகாப்பு தொடர்பான இராணுவ ஆலோசகர்களைக் குறைக்கவும், கூட்டு இராணுவ ஒத்திகைகளை நிறுத்தவும ஆஸ்திரேலியா தீர்மானித்துள்ளது

(இ-ஒ)

தொழில் கல்லூரிகளுக்குத் தடை

தமிழகத்தில் 6 பொறியியல் கல்லூரிகள் மற்றும் 16 தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு அனுமதி ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவிற்குக் கல்விக்காக வரும் இலங்கை மாணவர்கள் கல்லூரிகளின் தரம் மற்றும் அரசு அங்கீகாரம் குறித்து அவதானம் செலுத்தும்படி இலங்கை மாணவர்களின் நலன் பேணும் அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் தனியார்களால் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக்கல்லூரிகள் அதிகளவில் ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றில் இலங்கை மாணவர்கள் உட்பட வெளி நாட்டவர் கல்வி பயின்று வந்தனர்.

தற்போது இந்தக் கல்லூரிகளில் காணப்பட்ட கல்வி வசதிக் குறைபாடுகளால் மத்திய தொழில் நுட்பக் கல்விக் கழகம் இவற்றிற்கான அனுமதியை ரத்துச் செய்து விட்டது. (ஐ-ஒ)

31 ஆம் நாள் நெஞ்சகலா நினைவுகளும் நன்றி நவிலலும்

மண்ணுக்கு 13 — 05 — 1924

விண்ணுக்கு 20 — 06 — 2000

திருமதி லூட்ஸ் ஜெயமணி அந்தோனிப்பிள்ளை

''விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி எடுக்கப்படுவதில்லை''

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எம் அன்பு அன்னையின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு ஆறுதலளித்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதலளித்தவர்களுக்கும் மேலும் தேவையறிந்து பல்வேறு வழிகளில் உதவியும் ஒத்தாசையும் வழங்கியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் (21-07-2000) நாளை வெள்ளிக்கிழமை கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை நடைபெறும் அன்னாரின் ஆன்மஇளைப்பாற்றித் திருப்பலியிலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்:

திரு. திருமதி ஜெயரட்ணம், லில்லிமலர்,
திரு. திருமதி ஜெயசீலன், ஜோசேப், ஜெயமலர்,
திரு. திருமதி அல்பிரட்ஜோசேப், ஜெயதேவி,
திரு. திருமதி மன்மதன், ஜெயசீலி,
திரு. திருமதி ஜெயானந்தன், ஜெயசோதி.

''ஜெயமகால்'', கரவெட்டி (76504)

மரண அறிவித்தல்கள்

திருமதி செல்லத்தம்பி புஷ்பராசம்

'செல்வபதி' சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி செல்லத்தம்பி புஷ்பராசம் நேற்று (19-07-2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்தம்பியின் (ஓய்வு பெற்ற தேர்தல் பகுதி, உத்தியோகத்தர்) மனைவியும், செல்வவிக்னேஸ்வரன் (ஆசிரியர் - கண்டி), செல்வமுருகானந்தம் (சட்டத்தரணி - லண்டன்), செல்வகதிரமலை (லண்டன்), செல்வவேலாயுதம் (அமெரிக்கா), செல்வகலியுகவரதன் (லண்டன்), செல்வதிலகம், செல்வகமலாசனி, செல்வசிவநாயகி (பலாலி, ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவானந்தசிவம், சி. பாஸ்கரசிங்கம், (Action Faim) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (20-7-2000) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.30 மணியளவில் வடலியடைப்பு விழா வெளி மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர் யாபேருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்:
சி. பாஸ்கரசிங்கம்
(மருமகன்)

தற்காலிக முகவரி:
வடலியடைப்பு,
(Forut Office க்கு முன்பாக.) (76560)

திருமதி நல்லம்மா துரையப்பா

வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த திருமதி நல்லம்மா துரையப்பா அவர்கள் நேற்று(19-07-2000) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி. துரையப்பா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சி. வேலுப்பிள்ளை - க. ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவநேசராசா (வேலைகள் அத்தியட்சகர், நகரசபை, சாவகச்சேரி) அவர்களின் அன்புத் தாயாரும், மதிவதனாவின் அன்பு மாமியாரும் பார்கவியின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20-7-2000) பிற்பகல் 1-00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
து. சிவநேசராசா
(மகன்)

வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை. (76578)

தென்மராட்சி ஓய்வூதியர்களுக்கு

தென்மராட்சியைச் சேர்ந்த அரச ஓய்வூதியர்களில் பலருக்கும் மே மாதத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக அந்த மாதத்துக்குரிய ஓய்வூதியம் வழங்கப்படவில்லை.

இதனைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குகளை ஆராய்வதற்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப. 10.30மணிக்கு நெல்லியடி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்களை வங்கிப் பாஸ் புத்தகம் உட்பட ஆவணங்களுடன் தவறாது சமுகம் தருமாறு தென்மராட்சி அரசாங்க ஓய்வூதியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (அ)

விநியோகம்

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கான மூன்றாம் கட்ட இலவச பாடநூல்கள் இன்று காலை 9 மணி முதல் புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் வைத்து வழங்கப்பட இருப்பதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-173)

சமய சந்நிதிகளில்

யாழ். வண்ணார்பண்ணை, நீராவியடி ஜெய ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பிற்பகல் 2.30மணிக்கு 'அஷ்டோத்த சதகலச' (109) அபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

அபிஷேகத்தினை ரஞ்சிதக் குருக்கள் நடத்தவுள்ளார். (ஐ-10)

★ ★ ★

மந்திகை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும் இவ் உற்சவம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும். (ஐ-173)

குமணவில் பொருள்களை அனுப்புவோருக்கு

குமண கப்பலில் கொழும்புக்கு அனுப்புவதற்கான யாழ். உற்பத்திப் பொருள்கள் இன்று முதல் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து ஏற்றப்படவுள்ளன.

பொருள்களை அனுப்புவதற்கு அனுமதி பெற்றோர் ஏற்றுவதற்கு வசதியாக பொருள்களுடன் இன்று பருத்தித்துறையில் சமுகமளிக்குமாறு துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலில் பழுதடையாத பொருள்களும் இறுதியாக பழுதடையக் கூடிய பொருள்களும் கப்பலில் ஏற்றப்படும்.

தற்போது காங்கேசன்துறையில்பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'குமண' கப்பல் யாழ். உற்பத்திப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக இன்று வியாழக்கிழமை காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும்.

இக்கப்பலில் பொருள்களை அனுப்புவதற்கு விண்ணப்பம் செய்தவர்கள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் பருத்தித்துறையில் தமது பொருள்களை ஏற்ற முடியும் என்று யாழ். செயலகத்தின் திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-10-173)

குமாரின் மகனுக்கு கொலைப் பயமுறுத்தல்

அமரர் குமார் பொன்னம்பலத்தின் மகனுக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு 6-45 மணியளவில் இனந்தெரியாத நபர் ஒருவர் தொலைபேசி மூலம் இந்தப் பயமுறுத்தலை விடுத்ததாக அமரர் குமார் பொன்னம்பலத்தின் மனைவி தெரிவித்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி செயலாளர் ம. குமரகுருபரன், உபதலைவர் தில்லைக் கூத்தன் ஆகியோருக்கும் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டமை தெரிந்ததே. (ஐ-7-4)

கண்ணீர் அஞ்சலி

மகாஜனக்கல்லூரியின் பழையமாணவனும் முன்னாள் ஆசிரியரும் வலிகாமம் வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் உதவியாளருமாகிய

கந்தசாமி தர்மேசன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய சிவகாமி சமேத ஆனந்த நடராஜப்பெருமானை இறைஞ்சுகின்றோம்.

மகாஜனக் கல்விச் சமுகம்,
தெல்லிப்பழை.

(76574)

கண்ணீர் அஞ்சலி

மலர்வு: 30 - 10 - 1953 உதிர்வு: 18 - 07 - 2000

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்க உதவி மாவட்ட சாரண ஆணையாளர்

அமரர் கந்தசாமி தர்மேசன்

அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் மறைவு எமது சாரணர் மாவட்டத்திற்கு ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட ஆணையாளர்,
சாரணத் தலைவர்கள், சாரணர்கள்,
கிளைச் சங்கத்தினர்.

(76575)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 24-04-1971 ஆண்டவன் மடியில் 19-06-2000

அமரர் இராசரத்தினம் சேதுபதி

எமது முதுதலைவன் அமரர் அறிஞர் ஐயன்னா இராசரத்தினம் அவர்களின் ஏகபுத்திரன் இ. சேதுபதி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இன்றைய தினத்தில் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம்
அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையம்,
சுன்னாகம் மேற்கு.

(சி/12270)

மரண அறிவித்தல்

கிருஷ்ணர் - சாம்பசிவமூர்த்தி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் சாம்பசிவமூர்த்தி 17 - 07 - 2000 அன்று பிரான்ஸில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் – தங்கம்மா தம்பதிகளின் புதல்வனும் திரு. குலசிங்கம் (கனடா), குணசிங்கம் (கற்றன்), காலஞ்சென்றவர்களான புஸ்பலிங்கம், நவரட்ணராஜா மற்றும் இராசதுரை (பிரான்ஸ்), திருமதி செல்வராணி, பரமேஸ்வரி, மீனாட்சிதேவி, திருமதி இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி தவமணிதேவி (கனடா), கமலாதேவி (கற்றன்), தங்கராணி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான திருஞான சம்பந்தர், லோகராஜா மற்றும் கைலாயபிள்ளை (C.T.B), கந்தசாமி, திருமதி சிவபூரணம் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கைலாயபிள்ளை
ஆச்சி (தங்கை)

சோளியக்குடை,
மல்லாகம். (76564)

இதயன்

பேச்சும் எழுத்தும்

அரசாங்க நீர்வாக சேவை அதிகாரிகள் மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய உரையை நோக்கின், அரசாங்கம் தயாரித்துள்ள தீர்வுத் திட்டம் நியாயமான ஒன்றாகவே இருக்கும் என்று ஊகிக்கத் தூண்டுகிறது.

தாம் - தம்து அரசு - தயாரித்துள்ள இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டம் சிறுபான்மை மக்களுக்குரிய வரலாற்று உரிமைகளை வழங்குவதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

சிறுபான்மை மக்கள் வரலாற்று ரீதியாக அனுபவித்து வந்த உரிமைகளைக் கொடுக்காமல், அவர்களைக் குறிப்பிட்ட வரையறைக்குள் கட்டுப்படுத்தியதாலேயே இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது. அவர்களின் வரலாற்று ரீதியான உரிமைகளை வழங்குவதன் மூலமே நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர முடியும். அதனாலேயே சிறுபான்மையினரின் வரலாற்று ரீதியான உரிமைகளை வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்று அவர் கூறியிருக்கிறார்.

அத்தோடு நிற்காமல் -

சிறுபான்மையினருக்கு உரிமைகளை வழங்குவது குறித்த விடயத்தில் எத்தகைய அச்சுறுத்தல்களையும் ஆபத்துகளையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம் -

இது சிங்களவர்களின் நாடு என்ற எண்ணம் நிலைக்கும் பட்சத்தில் இந்த நாடே இல்லாது போகக்கூடிய நிலை உருவாகக் கூடும் - என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகாவின் இந்தப் பேச்சைப் படிக்கும் போது, சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்கும் ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தையே அரசாங்கம் தயாரித்துள்ளது என்று எவரையும் இலகுவில் நம்பவைக்கும்.

எனினும், தாம் பிரஸ்தாபித்த சிறுபான்மையினருக்கான வரலாற்று உரிமைகள் எவை என்பதனை ஜனாதிபதி தமது உரையில் விவரிக்கவில்லை. அதனால் அந்த உரையை வைத்து எதனையும் உறுதியாக அனுமானிக்க இயலாது.

மேலும், அரசாங்கத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இம்மாதம் ஏழாம் திகதி இணக்கம் காணப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டநகலின் வரைவு இன்னும் தயாராகவில்லை என்று அறிய வருகிறது. தமிழ்க் கட்சிகளுக்குக் கூட அது முழுமையான வடிவத்தில் வழங்கப்படவில்லை. இரண்டு தரப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பான குறிப்புகளே வழங்கப்பட்டுள்ளன. அந்தக் குறிப்புகளின் அடிப்படையிலேயே அரசு - தமிழ்க் கட்சிகள் பேச்சுக்கள் நடைபெற்றன.

சிறுபான்மையினரின் வரலாற்று ரீதியான உரிமைகளை புதிய தீர்வுத்திட்டம் வழங்குமாயின், தமிழ்க் கட்சிகள் அதனை நிராகரித்திருக்க மாட்டா. மிகக் குறிப்பாக ஆட்சியில் தமிழர்களுக்கு உரிய பங்கு வழங்கப்படவில்லை. தமிழர்களின் தாயகமான வடக்கு-கிழக்கு இணைந்திருக்க வகை செய்யப்படவில்லை. தமிழர்கள் இந்த நாட்டின் சம உரிமையுள்ள தேசிய இனத்தவர்கள் என்ற வரலாற்று உண்மை அங்கீகரிக்கப்படவில்லை. அவ்வாறு அரசு அங்கீகரித்திருப்பின் ஆகக் குறைந்தது தமிழர்களுக்கு பூரண தன்னாட்சி உரிமையை வழங்கி ஒரு சமஷ்டி ஆட்சி முறையை அறிமுகப்படுத்தியிருக்கும். ஆனால் அரசு - ஐ.தே.க இணக்கப்பாட்டில் அதற்கான ஆரம்பப் புள்ளியேனும் வைக்கப்படவில்லை.

அவ்வாறிருக்க, தீர்வுத் திட்டம் சிறுபான்மை மக்களின் வரலாற்று உரிமைகளை வழங்குவதாக ஜனாதிபதி கூறுவதை -- பேச்சும் எழுத்தும் ஒன்றே - என்று எவ்வாறு கொள்ளமுடியும்?

இடம்பெயர்ந்த இடங்களில் கடமையாற்ற தென்மராட்சி ஆசிரியர்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை20

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் வலயத்தில் வசிக்கும் ஆசிரியர்களை அவர்களது இருப்பிடத்துக்கு சமீபமாக உள்ள காலை நேரப் பாடசாலைகளில் பணி புரிய அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவுக்கும் தென்மராட்சி வலயப் பணிப்பாளருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த இணக்கம் ஏற்பட்டது.

தூதுக்குழுவில் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் இடம்பெற்றிருந்தார்.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர், அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டு கீழ்க் காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★ இந்த மாதத்தில் இருந்து வழமையான முறையில் அதிபர்கள் ஊடாக ஆசிரியர்களின் சம்பளத்தை வழங்கல்.

★ தென்மராட்சி வலயத்திலிருந்து ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகளை எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளும் அதே நேரத்தில் ஆசிரியர்களைப் புதிய சம்பளத் திட்டத்துக்குள் உள்வாங்குவதற்கான படிவங்களை வழங்கல்.

★ வலிகாம வலயத்துக்குள் இடம்பெயர்ந்திருக்கும் ஆசிரியர்களின் பிரச்சினைகளை அறிவதற்காக வலயக் கல்விப் பணிப்பாளர் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் வலிகாம வலயத்துக்கு வருகை தரல்.

(இ-3)

குணரத்தின மீதான குண்டுத்தாக்குதல்: கைதான 9 பேரில் நால்வர் விடுதலை

கொழும்பு,ஜூலை20

இரத்மலானையில் அமைச்சர் சி.வி.குணரத்தின குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த 9 பேரில் நால்வர் கல்கிசை நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இராசையா சச்சிதானந்தன், ஹேமலதா சச்சிதானந்தன், இராசநாயகம் கைலாயபிள்ளை, செல்வரத்தினம் செல்வநாயகம் ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

குண்டுத் தாக்குதலை நடத்திய நபரின் 'சேர்ட் பொக்கட்' டில் இருந்து மீட்கப்பட்ட கடிதம் ஒன்றில் "ஹேமலதா அக்காவிடம் தேவையான உதவியைக் கேட்கவும்" என்ற வாசகம் காணப்பட்டதை அடுத்து -

பிரஸ்தாப பெயரை உடைய இந்தப் பெண்ணும் மற்றும் அவரது இனத்தவர்களும் சம்பவ இடத்துக்கு அருகில் வசித்து வந்ததால் அவர்கள் கைது செய்யப்பட்டதாக அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.ரி.தவராசா தெரிவித்தார்.

பிரஸ்தாப நபர்கள் மருதானையிலுள்ள வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் பணிபுரிபவர்கள் என்றும் -

தற்கொலை குண்டுதாரியான இளைஞனுக்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை என்றும் - சட்டத்தரணி தெரிவித்தார்.

இதை அடுத்து நீதிவான் அவர்களை விடுதலை செய்தார்.

(இ-3)

வழக்குகளை இழுத்தடித்தனராம் இரு நீதிபதிகள் கட்டாய ஓய்வில்

கொழும்பு,ஜூலை20

வழக்குகளின் தீர்ப்புகளை வழங்காது இழுத்தடித்து தாமதங்களை ஏற்படுத்திய மேல்நீதிமன்ற நீதிபதிகள் இருவரை உடனடியாக ஓய்வில் - அனுப்புவது என நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட நீதிபதிகளுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வழக்குகளின் தீர்ப்புகளை வழங்காது இழுத்தடிப்பது தொடர்பாக பிரதம நீதியரசர் சரத் எஸ்.சில்வாவுக்கும் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கும் பெரும் எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு வழக்குகளின் தீர்ப்புகளை வழங்காது இழுத்தடிக்கும் நீதிபதிகளைக் கண்டறிவதற்கு பிரதம நீதியரசர் நடவடிக்கை எடுத்துள்ளார் என நீதிச்சேவை ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நீதிபதிகள் இருவரும் சில வழக்குகளின் விசாரணைகள் முடிவடைந்த பின்னரும் தீர்ப்பை வழங்க ஐந்து வருடங்கள்வரை இழுத்தடித்துள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

(இ-2)

மூதாட்டி பாலியல் வல்லுறவுச் சம்பவம்

சந்தேகநபரான குடும்பஸ்தர் கைதாகி விளக்க மறியலில்

80 வயது மூதாட்டியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் 5 பிள்ளைகளின் தந்தை ஒருவரை இருவார காலம் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் பி.குமாரசாமி உத்தரவிட்டார்.

அல்வாய் குளங்கரைப் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக, நெல்லியடிப் பொலீஸார் அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையை ஞாயிற்றுக்கிழமை காலை கைதுசெய்திருந்தனர்.

குறித்த சந்தேகநபரை நெல்லியடி பொலீஸார், பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்செய்த சமயம் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

(க-109)

மீனவர் உயிரிழப்பு

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் என்னும் இடத்தில் போரக்கடப்புக் குளத்தில் கட்டந்த திங்களன்று மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு விநாயகபுரத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சபேசன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார்.

(இ-3)

உருளைக் கிழங்கு விலை வீழ்ச்சி

யாழ்.நகரில் உருளைக் கிழங்கின் விலை நேற்று திடீரென வீழ்ச்சியடைந்தது. கி.180 ரூபாவாக விற்கப்பட்டகிழங்கு தற்போது 60 ரூபாவாக விற்கப்படுகிறது கப்பல் மூலம் கிழங்கு வந்ததாலேயே விலை வீழ்ச்சியடைந்ததாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

நாளை

ஆடி 1

வெள்ளிக்கிழமை

திதி: பஞ்சமி பின் இரவு 1.45 வரை.

நட்சத்திரம் : பூரட்டாதி முன் இரவு 10.15 வரை.

சுபநேரம் : 6.01 - 7.31

ராகுகாலம் : 10.31 - 12.01

இவை பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி

உதய வாக்கு

மனிதன் குறைபுடையவன் மட்டுமல்லன், குறை காண்பவனும் ஆவான். பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன்; தன் குறையைக் காண்பவன் முழுமனிதன்.

- சாக்ரடீஸ்-

கோழித் தீன் உற்பத்தி நிலையம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினால் அடுத்த மாதம் முதல்வாரத்தில் கோழித் தீன் உற்பத்தி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தினால் இரு இயந்திரங்கள் மேற்படி சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்கள் மூலம் ஒவ்வொரு மாதமும் 10 மெ.தொன் கோழித்தீன் உற்பத்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோழித்தீன் உற்பத்திக்கென 10 ஆயிரம் மெ.தொன் சோளம் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்கனவே மாட்டுத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு வருவது தெரிந்ததே.

(இ-5)

அலுவலகம் இடம்மாற்றம்

சண்டிலிப்பாய்,ஜூலை20

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இயங்கி வந்த சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் மானிப்பாய் பிரதான வீதியில் உள்ள சோதிவேம்படி பாடசாலை கட்டடத்துக்கு கடந்த வாரம் தொடக்கம் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(இ-135)

பொ.ம.ஐக்கிய முன்னணியின் செயற்குழு இன்று கூடுகிறது

கொழும்பு,ஜூலை20

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு வகுக்க வேண்டிய வியூகங்கள் தொடர்பாக ஆராய பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயற்குழு இன்று கூடவிருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெறும் இந்தக்கூட்டத்தில் முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் தலைவர்களும் பங்குபற்றுவர்.

தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், யுக்திகள், வியூகங்கள் ஆகியன தொடர்பாக இன்று விரிவாக ஆராயப்படவிருக்கின்றன.

முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு மாவட்ட மட்டத்தில் ஒதுக்கப்பட வேண்டிய தொகுதிகள் தொடர்பாகவும் இங்கு விரிவாக கலந்துரையாடப்படவிருக்கின்றது.

முன்னணியின் கொள்கை விளக்கம் தொடர்பாகவும் ஆராயப்படும்.

(இ-3)

அதிபர் சங்க செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

வட மாகாண அதிபர்கள் சங்கத்தின் செயற்குழு கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மருதனார்மடத்தில் இயங்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இடம் பெறும்.

முக்கிய விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன.

(இ-3)

பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த 9 பேருக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்.ஜூலை20

வவுனியா, அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரியில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 9 பேருக்கு யாழ்.கல்வி வலயத்தில் நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் விவரம் வருமாறு:-

★ எஸ்.சிறீகரன் - நயினாதீவு.

★ வி.விமலன் - நவாலி தெற்கு, மானிப்பாய்.

★ வி.மகேந்திரகுமார் - வரணி.

★ கே.கலாமோகன் - மானிப்பாய்.

★ செல்வி என்.புஸ்பமாலா- சங்கானை.

★ செல்வி வி.பத்மலோஜினி - சுழிபுரம்.

★ செல்வி ரி.மலர்விழி - உரும்பிராய்.

★ பி.பரந்தாமன் - வண்ணார்பண்ணை.

★ செல்வி தேவகி வல்லிபுரம் - கரவெட்டி.

(இ-3)

சாயி சிந்தனை

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் நன்மை கருதியும் இவர்கள் மீண்டும் தத்தமது பகுதிக்குச் சென்று மனநிம்மதியுடன் வாழ இறையாசி வேண்டியும் நாளை வெள்ளிக்கிழமை விசேட பூசைகளும், பிரார்த்தனைகளும் பின்வரும் ஆலயங்களில் இடம்பெறவுள்ளன.

சுழிபுரம் பறாளைவிநாயகர், தொல்புரம் வடக்கம்பிராய், அராலி நொச்சியம்பதி விநாயகர், வட்டுக்கோட்டை துறைட்டிப்பனை முத்துமாரி, நல்லை இருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ். சத்திர ஸ்ரீ ஞானவைரவர், நல்லூர் பாலகதிர்காமம், ஈவினை மீனாட்சி அம்மன், ஏழாலை இலந்தகட்டி ஸ்ரீ பாதாளவைரவர், நெல்லியடி ஸ்ரீ காளி அம்பாள், வட்டுக்கோட்டை ஆத்தியடி பிள்ளையார், பருத்தித்துறை தம்பசிட்டி பண்டாரி அம்பாள், திக்கம் மடத்துவாசல் பிள்ளையார், அல்வாய் மேற்கு துளசிப் பிள்ளையார் ஆகிய கோயில்களிலே இப் பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளன.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்தமக்கள்வாழும் பகுதிக்கு அருகில் உள்ள ஆலயங்களுக்குச் சென்று இந்தப் பிரார்த்தனை வழிபாடுகளில் பங்குபற்றுமாறு சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் கேட்டுள்ளார். (க-30-28)

ஓட்சிசன் சிலிண்டர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ் ஆஸ்பத்திரிக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களில் ஒரு தொகுதி ஓட்சிசன் சிலிண்டர்கள் மாத்திரம் நேற்று முன்தினம் வந்த செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவையான வேறு அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் இதில் எடுத்துவரப்படவில்லை என்று தெரியவந்தது.

(இ-139)

காயமடைந்தவர் மரணம்

கோஷ்டி மோதலில் இடையில் சிக்குண்டு தலையில் பலத்த காயங்களுடன் ஆபத்தான நிலையில் மந்திகையில் அனுமதிக்கப்பட்ட சுவலாளி மரணமானார்.

கடந்தஞாயிறு துன்னாலை வேம்படியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த ஆழ்வான் சௌந்தரநாயகம் (45 வயது) என்பவரே மரணமானவராவார்.

கோஷ்டி மோதலில் படுகாயமடைந்த மற்றைய இருவரான அ. குணம் (35 வயது) பொன்ராசா ரூபாலினி (15 வயது) ஆகிய இருவரும் தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(இ-173-109)

பொ.ஐ.மு வுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிட எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 20

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணையாது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடவேண்டும் என்று அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் தலைமைப் பீடத்தை வற்புறுத்தி வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் தனித்தும் ஏனைய மாகாணங்களில் ஐக்கிய முன்னணியுடன் இணைந்தும் போட்டியிடுவது என்று அக்கட்சியின் அரசியல் பீடம் முடிவு செய்திருந்தது.

அந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அக்கட்சியின் செயலாளர் ரவூப் ஹக்கீமை அலரி மாளிகைக்கு அழைத்துக் கேட்டிருந்தார்.

அமைச்சரும் அக்கட்சியின் தலைவருமான எம்.எச்.எம். அஷ்ரப் வெளிநாட்டில் இருப்பதால் அவர் திரும்பிய பின் இதுபற்றி முடிவு செய்வதாக அவர் ஜனாதிபதிக்குத் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் அஷ்ரப் நேற்று முன்தினம் நாடு திரும்பியதையடுத்து இதுவிடயமாக ஆராயக்கட்சியின் உயர் அரசியல் பீடம் ஓரிருதினங்களில் கூடவிருக்கின்றது.

முன்னர் எடுத்த முடிவை மாற்றவேண்டாம் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் உயர் அரசியல் பீடத்தைக் கோரியுள்ளனர். (இ-10)

பால்மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

அண்மைக்கால யுத்த சூழ்நிலையை அடுத்து கொடிகாமம் மற்றும் மிருசுவில் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டை வைத்தியசாலையில் தங்கியுள்ள மக்களுக்கு அண்மையில் இலவச பால்மா விநியோகிக்கப்பட்டது.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் ஆதிமகானந்த சுவாமிகளால் வழங்கப்பட்ட பால்மாவினை ஆனைக்கோட்டை அன்பகத்தைச் சேர்ந்த ந. நவரட்ணம் மேற்படி பாடசாலையில் தங்கியுள்ளவர்களுக்கு விநியோகித்தார்.

(இ-10)

பண்ணைப் பாலத்தை திருத்தும் வேலைகள் மீண்டும் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். பண்ணைப் பாலத்தின் திருத்தவேலைகள் மீண்டும் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஐந்து நாள்கள் நடைபெறவுள்ளன.

தினமும் பகல் 12மணிக்கும் பின்பு திருத்த வேலைகள் நடைபெறவுள்ளதால் பிரயாணிகள் பஸ் நிலையத்திலிருந்து வேலைகள் நடைபெறும் இடம் வரை ஒரு பஸ்ஸிலும் பின்பு அங்கிருந்து ஊர்காவற்றுறை வரையும் இன்னொரு பஸ்ஸிலும் பயணம் செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்களை இதற்கு ஒத்துழைக்கும்படி வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் கேட்டுள்ளனர்.

(இ-10)

வாராந்த நிகழ்வுகள்

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமைமுற்பகல் 10.30 மணியளவில் பேரவையின் தலைவர் தொழிலதிபர் சி. நாகலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுக வுரையை தொண்டமனாறு வீரகத்தி மகாவித்தியாலய ஆசிரியர் கு. இரவீந்திரன் நிகழ்த்துவார்.

கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி ஆசிரியர் இ. இராகவன் "இடர் வந்துற்றபோது" என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

நண்பகல் 12-30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

(ஐ-30-173)

செய்திக் துளிகள்

பால்மா தட்டுப்பாடு

வடமராட்சி, ஜூலை 20

குடாநாட்டில் பால்மா வகைகளுக்கு பலத்த பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கான பால்மா, கொழுப்பு அகற்றப்பட்ட பால்மா, முழு ஆடைப்பால்மா ஆகிய பால்மா வகைகளே தட்டுப்பாடாக உள்ளன.

(ஐ-173)

நிதிஉதவி

நெடுந்தீவு, ஜூலை 20

மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கட்டட வேலைகளுக்கென அதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஐந்து லட்சம் ரூபாவை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

(க-111)

மடைப்பள்ளி அமைப்பு

சுழிபுரம், ஜூலை 20

சுழிபுரம் வடக்கு கண்ணகியம்பாள் ஆலயத்திற்கு புதிய மடைப்பள்ளி மண்டபம் கட்டப்பட்டு வருகின்றது.

இந்தக் கட்டடத்தை தனியொருவர் தமது உபயமாகக் கட்டி வழங்க முன்வந்துள்ளார்.

பொதுக் கூட்டம்

சுழிபுரம், ஜூலை 20

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

(க-28)

கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படும்

நெடுந்தீவு, ஜூலை 20

நெடுந்தீவு பிரதேசசபை, கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

(க-111)

கோடா வீட்டு

நெல்லியடி, ஜூலை 20

வடமராட்சிப் பகுதியில் உள்ள அல்வாய் கட்டைப்புளியடி என்றகிராமத்தை முற்றுகையிட்ட நெல்லியடி பொலீஸார், அங்குள்ள 5 வீடுகளில் இருந்து பெருமளவு கோடாவை மீட்டுள்ளனர்.

நெல்லியடி பொலீஸ் நிலைய சார்ஜன்ட் பி. அனுர, பொலீஸ் கான்ஸ்டபிள் கே. கதிர்காமநாதன் ஆகிய இருவருமே கடந்த ஞாயிறு காலை இவற்றை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கோடாவுடன் தொடர்புடைய ஐவரை நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

(ஐ-109)

நிறுவுநர் உருவச் சிலை

சண்டிலிப்பாய், ஜூலை 20

மானிப்பாய் இந்துக் கல்லூரி நிறுவுநர் அமரர் சண்முகம்பிள்ளையின் முழு உருவச் சிலை கல்லூரி முன்பக்கத்தில் நிறுவப்படவுள்ளது. கொழும்பிலுள்ள முன்னாள் மேல் மாகாண ஆளுநர் டி. எம் சுவாமிநாதன் அன்பளிப்புச் செய்த 20 ஆயிரம் ரூபா நிதி மூலம் இந்த உருவச்சிலை உருவாக்கப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் கு. சண்முகநாதன் தெரிவித்தார்.

(இ-153)

சின்னஞ்சிறு விளம்பரம்

தவறிவிட்டது

நாகராசாஐயர் ஹரிதர்சன் (மாணவன், மத்திய கல்லூரி) என்பவருடைய விசேட அடையாள அட்டை மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலுக்கும் தெல்லிப்பழை தடைமுகாமிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்தில் ஒப்படைத்து உதவவும். (76543)

588/7, நாவலர் வீதி, அரியாலை என்னும் இடத்தைச் சேர்ந்த மகேந்திராசா கருணராஜ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இலக்கம் 740523104 V) திருநெல்வேலிச் சந்திக்கும் ஆனைக்கோட்டைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நியூ ஹப்பி தையலகம், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (76541)

முருகந்த நகர் மாசார், பளையைச் சேர்ந்த கிருஷ்ண கோபாலபிள்ளை சசிகரன் என்பவருடைய விசேட அ. அட்டை (இல. 091502865) 14-07-2000 அன்று உடுப்பிட்டி பல நோ.கூ.சங்கத்தில் பொருள்கள் வாங்கும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தற்போதைய முகவரியான மு. செல்வராசா, சந்நிதி றோட், உடுப்பிட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (76555)

855, K. K. S வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த னகரெட்னம் முகுந்தன் என்பவருடைய தே. அ. அ. (இல. 750892728V), விசேட அ. அ. (இல. 0902003957) என்பன 15-07-2000 அன்று யாழ். கச்சேரிக்கும் — தட்டாதெருவுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'எக்காளத் தொனி ஆலயம்' கச்சேரியடி அல்லது மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (76558)

முலவை மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த பொன்கிளி தருமகுலசிங்கம் என்பவருடைய விசேட அ. அட்டை (இல. 0907015257) தெல்லிப்பழைக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மல்லாகம் தபாற்கந்தோரில் ஒப்படைத்து உதவவும். (76533)

யோய்யாமொழி ஜோதிடம்

தடைப்படும் திருமணம் விரைவில் நடைபெற, வெளிநாட்டுப் பிரயாணத் தடை நீங்க ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம் சனி, செவ்வாய்க்கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (76542)

திருமணசேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. டாக்டர், ஆசிரியர் உண்டு. புகைப்படம் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (76559)

SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில தபால் மூலமும் பயிற்சி. ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி: 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (76538)

தவறிவிட்டது

மீசாலை மேற்கு சங்சரப் பிள்ளை வைரமுத்து என்பவரது திறப்புக்கோர்வை ஒன்று கொடிகாமத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தம்பு இராமநாதன் பயனியர் மில், கொடிகாமம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (76551)

கண்ணீர் அஞ்சலி

அமரர் வே. கனகரத்தினம்

(வலி. தென் மேற்கு பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)

அன்னாரின் மறைவை ஒட்டி துயருறும் குடும்பத்தவர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி-12266)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வி

அருள்திரேசா சவரிமுத்து

(லீலா)

பிறப்பு 1943-11-14 இறப்பு 20-06-2000

மரணத்துள் மறைந்தாலும் எம் மனங்களில் மறையாது என்றும் வாழும் உங்களை நினைவு கூருகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ் புனித மரியாள் பேராலயத்தில் 20-07-2000 காலை 6.45 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய், சகோதரர்கள்.

386, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம் (76425)

---

33 ஆம் நாள் நினைவஞ்சலியும்

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

அமரர்

இராசரத்தினம் சேதுபதி

மண்ணில் 24-04-1971 விண்ணில் 18-06-2000

எங்கள் குலக் கொழுந்து அமரர் இராசரத்தினம் சேதுபதி அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் உற்றுழி உதவியும் அவர் மறைந்த காலை பலவகையில் உறுதுணை புரிந்தும் எமது மனங்கனிந்த நன்றிக்கு உரித்தான உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரையும் அன்னாரின் இல்லத்தில் இன்று (20-07-2000) நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் சேதுபதியின்
அன்னை.

கல்லை வேம்படி, சுழிபுரம். (76506)

---

33 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 28-09-1949 மறைவு 18-06-2000

திருமதி இலட்சுமணன் தவமலர்

உள்ளத்தில் நிறைந்த உத்தமியே!

தவமிருந்து பெற்றெடுத்த
தவமலரே நீ எங்கே?
தரணியிலே பவனிவந்த
தவத்திருவே நீ எங்கே?
உயிருடனே உலாவந்த
உத்தமியே நீ எங்கே?
உன் திருவுடலை திரும்பவும்
நாம் காண்பதெங்கே?

அம்மன் தேர்போல் நீ
அசைந்துவந்த அழகெங்கே?
எம் மனமெல்லாம் நீ நிறைந்த
மனமகிழ்ச்சி தான் எங்கே?
பழகிய நாள்களையெல்லாம்
மறக்கமுடியுமா நாம் இங்கே?
இழந்ததுதான் உன் உடலை உள்ளத்திலே
நிறைந்திருக்கின்றாய் நீ இங்கே!

— குடும்பத்தினர்

தியேட்டர் லேன்,
இணுவில். (75546)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கந்தையா சண்முகரட்ணம்

(ஓய்வுபெற்ற பிரதம விதை, யாழ் தொழிற்றிணைக்களம்)

அன்னை மடியில் 16-11-1936 அம்பலன் திருவடியில் 20-06-2000

ஊக்கத்துடன் உயர்வு தந்து
எமை வளர்த்த தெய்வமே!
ஒரு நொடியில் எமைப் பிரிந்து
ஒரு திங்கள் ஆனதோ?
கால மெல்லாம் கண்ணீருடன்
காக்க வைத்து எங்குதான் சென்றீர்களோ?
காலங்கள் கழிந்தாலும் உங்கள்
நினைவுகள் என்றுமே தீர்காது!

தங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மகன், மகள், மருமகன்.

தற்காலிக முகவரி:
நந்தாவில் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

நிரந்தர முகவரி:
29, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(76402)

கண்ணீர் அஞ்சலி

கணிதநெறி இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த
செல்வி செல்வசிவநாயகியின் அன்புத் தயார்
திருமதி செல்லத்தம்பி புஸ்பராகம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தின் துயரில் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் மன்றம்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

(76580)

இந்த இளம் தாய்க்கு உதவுங்கள்

சாவகச்சேரி, மீசாலை, வங்களா வீதியில் வசித்து இப்போது இடம் பெயர்ந்துள்ள திருமதி சுபாசினி நகுலேந்திரன் ஓர் இருதய நோயாளி. ஒரு குழந்தைக்குத் தாயாரான இவருக்குப் பலவகைச் சிகிச்சை செய்யப்பட்டபோதும் இருதய மாற்றுச் சிகிச்சை அவசியம் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். அதன் பிரகாரம் சென்னை மெடிக்கல் மிஷன் வைத்தியசாலையில் இருதய மாற்றுச் சிகிச்சை செய்ய ஏற்பாடாகியுள்ளது. இந்தச் சிகிச்சைக்கு இலங்கைப் பணத்தில் எட்டு லட்சம் ரூபா தேவைப்படுகிறது. ஆனால் நோயாளியின் குடும்பப் பொருளாதார நிலைமை அதற்கு உகந்ததாக இல்லை. இந்த இளம் தாயின் உயிரைக் காப்பாற்றும்பொருட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் உதவி நிதி ஒன்றை ஆரம்பித்தது.

கருணை உள்ளம் கொண்டவர்களின் உதவியினால் இதுவரை அந்த நிதிக்கு 1,57,878 ரூபா சேர்ந்துள்ளது. இந்த நிதிக்கு பணம் சேகரித்து உதவுவதற்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் முன்வந்துள்ளனர்.

ஒரு தாயின் உயிரைக் காப்பாற்றுவதற்கு உங்களால் இயன்ற நிதி வழங்கி உதவுங்கள். நீங்கள் அன்பளிப்புச் செய்யும் நிதியை, இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் (இப்போது பருத்தித்துறையில் இயங்குகிறது) இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள 16524 கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தவும்.

ஒரு தாயின் உயிரைக் காப்பாற்ற உதவுவதன் மூலம் அவரின் குழந்தைக்கும் வாழ்வளித்தவர்கள் ஆவீர்கள். இயன்றதை விரைந்து உதவுங்கள் பெரும் புண்ணியம் சேரும். (அ)

ஆண்டு மிலேனியத்தில் முதலாவது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்

தர்மபாலன்—சாந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வி

பிரனீத்தா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (20-07-2000) வியாழக்கிழமை திருகோணமலையில் உள்ள உவர்மலை மத்திய வீதியில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

பிரனீத்தாவை அவரது அன்பின் அப்பா, அம்மா, அப்பம்மா, கொக்குவில் மேற்கு சொர்ணவடலியில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, செல்வன், ஞானம் மாமா, கனடாவில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, டோறிஷா, ஹரிசா, மனுசா, அக்காமார்கள், ரவீந்திரன மாமா, கொலன்டிலுள்ள பெரியமாமா, அத்தை, தஜீவன், வினுஷன், அத்தான்மார் மற்றும் கொக்குவில் கிழக்கு கருவேலடி வீதியில் இருக்கும் தாத்தா குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள் அனைவரும் அருள்மிகு சொர்ண சித்திவிநாயகர் அருளோடு சகலகலைகளும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

க. மகாதேவா
(அம்மப்பா)

"துவாரகை"
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.

(76552)

கலந்துரையாடல்

காரைநகர்,ஜூலை20

யாழ். மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை புள்ளிகள் அடிப்படையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். புதிய உயர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

ஆரம்பக்கல்வி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. (இ-73)

ஐவர் உயிரிழப்பு

கடந்த திங்களன்று இடம்பெற்ற பல்வேறு மோதல் சம்பவங்களில் தமது தரப்பில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர் என்று 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

மட்டுவில் பகுதியில் ஏற்பட்ட மோதலின்போது - லெப்டினன்ட் மன்மதன் (மயில்வாகனம் சுதாகரன் - திருகோணமலை), மாதவி (துவாளிக் மொறாக் யூபியட்- யாழ்ப்பாணம்) ஆகியோரும் -

திருகோணமலை மொங்கான் குழியில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் லெப்டினன்ட் முகுந்தன் (மயில்வாகனம் பரமசிவம் - திருகோணமலை), செல்வியன் (கோலநாயகம் ஆரியப்பிரகாஸ் - திருகோணமலை) ஆகியோரும் -

மன்னார் நரிக்குளம் பகுதியில் ஏற்பட்ட மோதலில் எல்லைப் படைவீரரான ஜெயரட்ணம் றீவிசன் ஜெயந்தன் (யாழ்ப்பாணம்) என்பவருமே - உயிரிழந்தவர்களாவர். (இ-4)

2 ஆயிரம் வழங்க நடவடிக்கை

மருதங்கேணி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உடனடித் தேவைக்கான நிவாரணமாக ரூபா இரண்டாயிரம் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இதற்கான உறுதிச்சீட்டுக்களில் (வவுச்சர்) இதுவரை கையொப்பம் வைக்காதவர்கள் நாளை வெள்ளிக்கிழமை தமது வங்கிக் கணக்குப் புத்தகத்துடன் வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே பத்தாம் திகதிக்கு முன்னர் இப்பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளவர்களுக்கு ஏற்கனவே உறுதிச்சீட்டுக்களில் கையொப்பம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பரீட்சை ஆணையாளரினால் எதிர்வரும் 24, 25, 26ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (4ஆம் வருடம்), ஆங்கில டிப்ளோமா (2ஆம் வருடம்) ஆகிய இரு பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

இவற்றில், உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா எதிர்வரும் ஒகஸ்ட் 2ஆம், 3ஆம் திகதிகளிலும்-

ஆங்கில டிப்ளோமா ஒகஸ்ட் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளிலும்- நடைபெறவுள்ளதாக பயிற்சி இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் நேரசூசியையும், அனுமதி அட்டையினையும் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

MOBILE NET
MCS
COMPUTER SERVICES

நவீன தொழில்நுட்பத்தின் அறிமுக வரிசையில்.....

உங்களிடம் **Multimedia Computer** உள்ளதா?

ஒரே ஒரு **CD** யில் 150க்கு மேற்பட்ட புத்தம் புதிய தமிழ்ச் சினிமாப் பாடல்களை **CD**யில் கேட்டு மகிழுங்கள். **CD**யில் பாடல்கள் Selection முறையில் Copy செய்து தரப்படும்.

Director,
MCS
324, Palaly Rd., Jaffna.
(76517)

தெற்கு அரசியல்வாதிக்கு பாபா அளித்த மோதிரம்!

கொழும்பு,ஜூலை20

பகவான் சத்தியசாயிபாபா வைத் தரிசித்து அவரது ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக அண்மையில் இந்தியா சென்ற அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவருக்குப் பகவான் சத்தியசாயிபாபாவிடமிருந்து 10 லட்சம் ரூபா பெறுமதியான மோதிரம் பரிசாகக் கிடைத்தது என கொழும்பு சிங்கள வாரஇதழ் ஒன்று தெரிவிக்கிறது.

இந்த நாட்டின் எதிர்காலம் தொடர்பான - இந்த நாடு முழுவதற்கும் முக்கியமான - பொன்மொழி ஒன்றைக் கூறியவாறே பகவான் சாயிபாபா அந்த மோதிரத்தை பிரஸ்தாப அரசியல்வாதிக்குப் பரிசாக அளித்தார் எனக் கூறப்படுகிறது. இத்தகவல் அரசாங்கக்கட்சி அரசியல்வாதிகளின் காதுகளுக்கு எட்டியதைத் தொடர்ந்து பகவான் சாயிபாபா உதிர்த்த பொன்மொழி என்ன என்பதை அறிவதில் அவர்கள் கடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று அந்த சிங்கள வாரஇதழ் மேலும் தெரிவிக்கிறது. (இ-உ)

தணிக்கைக்கு எதிரான மனு:

வழக்கைத் தொடரும் அவசியம் இல்லை என்கிறது நீதிமன்றம்

கொழும்பு,ஜூலை20

யுத்தச் செய்திகளை வெளியிடுவதில் விதிக்கப்பட்ட தணிக்கையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் சம்மந்தமான வழக்கு விசாரணைகளைத் தொடரவேண்டிய அவசியம் இல்லை என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. செய்தித் தணிக்கைக்கு எதிராக பத்திரிகை ஆசிரியர் சங்கமும் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் சிலவும் தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற போதே பிரதம நீதியரசர் இதனைத் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டப் பிரமாணங்களின் 14ஆவது சரத்து ஏற்கனவே அரசாங்கத்தினால் நீக்கப்பட்டுள்ளது. எனவே செய்தித் தணிக்கைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகளைத் தொடரவேண்டிய அவசியமில்லை என பிரதம நீதியரசர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை -

செய்தித்தணிக்கை தொடர்பாக தொடர்ந்தும் சில ஒழுங்கீனங்கள் நடைமுறையில் இருப்பதாக மேற்படி மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆ.கே.டபிள்யூ. குணசேகர நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை அடுத்து தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கும், பத்திரிகை ஆசிரியர்களுக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்படும் என சட்டமா அதிபர் சார்ல் ஆஜரான பிரதி சொலிசிஸ்ரர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார். (ஐ-7)

ஆசிரிய நேர்முக.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணேசன் தயாளினி (நவாலி தெற்கு), ராஜரட்ணம் தவக்குமாரன் (சண்டிலிப்பாய் மேற்கு), ஜீவரட்ணம் கெல்வின் (யாழ்ப்பாணம்), குமாரசுவாமி சுஜாதா (மாதகல்), யசோதா சிவரட்ணம் (மானிப்பாய்), தம்பையா சிவரட்ணம் சிவகுமார் (மானிப்பாய்), பி.கமலேஸ்வரி (மாதகல் மேற்கு), கந்தையா ஸ்ரீ கருணாகரன் (மானிப்பாய்), அருளையா ஜெயந்து (ஆனைக்கோட்டை), தர்மசேகரம் விபுசாந்தி (மானிப்பாய்), கணேசராஜா செந்தினி (சண்டிலிப்பாய் மத்தி.), நடராஜா தர்சினி (சண்டிலிப்பாய்), எம். ரேணுகா (மானிப்பாய்), வாகினி ராஜேந்திரா (வட்டுக்கோட்டை), ஏ. தர்சினி (வட்டுக்கோட்டை), மாரிமுத்து ஜெகராஜா (அராலி தெற்கு), சிதம்பரநாதன் சிவதரன் (வட்டுக்கோட்டை), பாலசுகந்தினி தனபாலசிங்கம் (அராலி தெற்கு), சோபனா நவரட்ணம் (வட்டுக்கோட்டை), உமையாள் கதிர்காமராஜா (வட்டு.தெற்கு), தக்சாயினி நவரட்ணராஜா (சித்தன்கேணி), நல்லையா ஹரிஹரன் (சங்கானை), தக்ஷாயினி கேசவராஜன் (வட்டுக்கோட்டை), ஞானசந்திர மூர்த்தி பாமினி (சுழிபுரம்), எம். நித்தியானந்தம் (முகவரி இல்லை), சோமசுந்தரம் வேல்முருகன் (சுழிபுரம்), லதா சடாட்சரம் (வட்டுக்கோட்டை), மஞ்சுளா நித்தியானந்தன் (சித்தன்கேணி), வாசுகி கனகசபை (வட்டுக்கோட்டை), டிலாந்தி சர்வினி கணேசன் (வட்டுக்கோட்டை), கதிர்காமராஜா திருக்குமரன் (வட்டுக்கோட்டை), செல்வராஜா சதாகினி (வட்டுக்கோட்டை).

மனைப்பொருளியல்

சிவஞானம் லோகிதபாலி (ஏழாலை), சிவகரணம் வனிதகுமாரி (வயாவிளான்), காங்கேசு சுகிர்தா (தெல்லிப்பழை), பெனடிக்ட் சேவியர் ஜெஸ்லின் உதயராணி (கீரிமலை), துரைரத்தினம் கௌசல்யா (சங்கானை), சிவஞானம் கஜேந்திரா (வட்டு.தெற்கு), ஞானேஸ்வரி பாலச்சந்திரன் (வட்டுக்கோட்டை), குமரகுருநாதன் அம்பிகை (சுழிபுரம்), எஸ். ஐங்கரமூர்த்தி (வட்டுக்கோட்டை).

நடனம்

சுந்தரலிங்கம் சுனிதா (மானிப்பாய்), நவரட்ணம் சுபாங்கி (மானிப்பாய்), நவரட்ணம் சித்திராங்கி (மானிப்பாய்), ராஜதுரை தபோதினி (மானிப்பாய்), சிவபாதம் சிவரதனி (ஆனைக்கோட்டை), வாமதேவன் சுகந்தினி (சுழிபுரம்), சிறீகாந்தன் நிரோஜினி (சித்தன்கேணி), தர்மினி இராஜரட்ணம் (சங்கானை), விஜிதா அருளம்பலம் (சங்கானை), பாலசிங்கம் நிலானி (சங்கானை).

சங்கீதம்

பொன்னுத்துரை தவமலர் (வட்டுக்கோட்டை), செந்திவேல் இரட்னேஸ்வரி (பண்டத்தரிப்பு), ருத்திரன் லதாங்கி (சுழிபுரம்), சிவப்பிரகாசம் நித்தியகௌரி (பண்டத்தரிப்பு).

புலமைப் பரிசில் பரீட்சை விடைகள்

நேற்றைய உதயனில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை வினாக்களுக்கான விடைகள் வருமாறு.-

பகுதி I

(1) தாமரை (2) நெல்
(3) கண்ணம்மா (4) 1 (5) 3
(6) 2 (7) 2 (8) 3 (9) 2
(10) ஏணி (11) மீன்
(12) புல்லாங்குழல் (13) 4 (ஏனையவை இரப்பர் சில்லுகள். நான்காவது மட்டும் வண்டிலுக்குரிய மரச் சில்லு)
(14) 2 (15) 3 (16) 2
(17) 2 (18) 1 (19) 2 (20) 2
(21) 2 (22) 2 (23) 2 (24) 2
(25) 3 (26) 2 (27) 3 (28) 3
(29) 2 (30) 3 (31) 2 (32) 2
(33) 1 (34) 1
(35) 
(36) 
(37) 
(38) தம்பியாடசாலைக்குப் போனான்.
(39) அண்ணா கடைக்குப் போனான்.
(40) கமலா பால் குடித்தாள்.

பகுதி II

(1) சந்திரன் (2) கடல்
(3) நட்சத்திரம் (4) வெள்ளி/ஓடம்/உள்ளம்
(5) முழுகுதம்மா
(6) (i)மாட்சி (ii)உள்ளம் (iii)கடல் (iv)வானம்
(7) இரவுப்பொழுது (8) BELL
(9) FISH (10) BOOK
(11) EIGHT
(12) ஆதவன்/கதிரவன்/உதயன்
(13) பார்/தரணி/பூமி
(14) சேவை/தொண்டு
(15) விடியற்காலை (16) சூரியன்
(17) காகம் (18)உலகம்
(19) சேவல் (20)காலை
(21) வியாழன் (22)சனி
(23) செவ்வாய் (24)வியாழன்
(25) புவிச்சுழற்சி/இரவு-பகல்
(26) சரி (27) சரி (28) பிழை
(29) சரி (30) சரி (31) சரி
(32) பிழை (33) சரி (34) பிழை
(35) பிழை
(36) 1-3, 2-4, 3-5, 4-1, 5-2
(37) எண்ணூற்று எழுபத்து மூன்று ரூபா ஐம்பது சதம்.
(38) மேல்மாகாணம் (39) ரூபா10
(40) ரூபா60. (41) ரூபா60
(42) ரூபா30. (43) 6லீற்றர்
(44) சித்திரை/ஏப்பிரல்
(45) PENCIL (46) UMBRELLA
(47) KITE (48) FLOWER

தரகர்களிடையேயான தகராறே அகதிகள் அவலத்துக்கு காரணம்

கடலில் விடப்பட்டோர் கரைசேரவில்லை

தலைமன்னாரில் இருந்து தமிழகம் புறப்பட்ட அகதிகள் 12 பேர் பின்னர் பேசாலைக்கு அருகே கடலில் இறக்கிவிடப்பட்ட சம்பவத்துக்கு, அகதிகளைத் தமிழகம் அனுப்பும் படகுத் தரகர்களிடையே ஏற்பட்ட பணத் தகராறே காரணம் எனத் தகவல் கிடைத்துள்ளது.

கடந்த திங்கள் இரவு 7 மணியளவில் தலைமன்னாரில் இருந்து 12 அகதிகளை ஏற்றிச்சென்ற படகு ஓட்டிகள் நடுக்கடலில் வைத்து அவர்களை இந்திய றோலர் படகுகளுக்கு மாற்றி ஏற்றியபோது இந்தியப் படகு உரிமையாளருக்கு வழங்கவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் வந்துவிட்டதாகவும்-

அதனை அடுத்து இந்தியப் படகு ஓட்டிகள் அகதிகளை அந்த இடத்திலேயே கடலில் இறக்கிவிட முயற்சிக்கவே அகதிகளுக்கும் அவர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியதாகவும் -

இந்தச் சம்பவத்தில் அகதிகள் பலருக்கு வெட்டுக் காயங்கள் ஏற்பட்டதாகவும் -

கரை சேர்ந்த நான்கு அகதிகளில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கடலில் இறக்கிவிடப்பட்ட 12 பேரில் குழந்தைகள், பெண்கள் உட்பட 8 பேர் இன்னமும் கரைசேரவில்லை.

பணமோசடியில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் படகுத் தரகர் ஒருவரை பேசாலை அகதி முகாமில் வைத்துக் கடற்படையினர் நேற்றுக் கைதுசெய்ததாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

யுத்தச் செலவீனங்களுக்கான நிதிப் பிரேரணைகள் ஏற்பு!

கொழும்பு,ஜுலை20

யுத்தச் செலவீனங்களை ஈடு செய்ய அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த நான்கு குறைநிரப்புப் பிரேரணைகள் நேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவற்றுக்கு ஆதரவாக 88 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இலங்கை முற்போக்கு முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் மாத்திரம் எதிர்த்து வாக்களித்தார். ஈ.பி.டி.பி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்று குழு உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது நாடாளுமன்றில் சமுகமளித்திருக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைப் பிரஸ்தாபித்தார்.

இந்த நிதி ஒதுக்கீட்டுக்கான பிரேரணைகள் தகுந்த முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

இதனை குழுக்களின் பிரதித் தலைவர் ரவூப் ஹக்கீம் நிராகரித்தார். தமது ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டதை அடுத்து ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பு நேரத்தில் சபையில் இருந்து வெளியேறினர். (ஐ-7)

சிங்கப்பூர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பை விட்டு வெளியேறி சிங்கப்பூரில் புலிகளைச் சந்தித்துள்ளார் என நம்பகமாகத் தெரியவருகின்றது.

- இப்படி அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்தது. (உ-164)

கிணற்றில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீல வர்ண அரைக்காற்சட்டை மற்றும் நீலக் கோடிட்ட வெள்ளை நிற சேர்ட் என்பனவற்றுடன் அந்த எலும் புக்கூடு காணப்பட்டது.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட இந்த எலும்புக்கூடு கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மருத்துவ சோதனை செய்யப்பட்ட பின் அக்கராயன் காவல்துறைப் பணிமனையில் பொதுமக்கள் அடையாளம் காட்டுவதற்காக வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியில் படையினர் நிலைகொண்டிருந்த காலத்தில் அப்பகுதியில் காணாமற்போன 184 பொதுமக்களில் ஒருவரின் எலும்புக்கூடாக இது இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ஐ-4)

சத்திர சிகிச்சை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறக்கணித்துவிட்டு 15 டாக்டர்கள் நேர்முகப்பரீட்சைக்குச் செல்வதில்லை என்று தீர்மானித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

ஏனைய ஏழு டாக்டர்களுமே கொழும்பு செல்லவுள்ளனர். இவர்களிலும் நால்வர் மயக்க மருந்து செலுத்தும் டாக்டர்கள் என்பதனாலேயே சத்திர சிகிச்சைகளை முழு அளவில் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் ஒரே தடவையில் இரு டாக்டர்கள் மட்டும் செல்ல முடியும் என்பதால் இந்த ஏழு டாக்டர்களும் கொழும்பு சென்று திரும்புவதற்குச் சுமார் மூன்று வாரங்கள் செல்லலாம் என்று நம்பப்படுகிறது.

டாக்டர்களுக்குப் பதவி உயர்வுக்கான இந்த சிங்கள வாய்மூலப் பரீட்சை 1990ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்திலேயே நடைபெற்று வந்தது என்றும் வழமைக்கு மாறாக இந்த வருடமே இந்தப் பரீட்சை கொழும்பில் நடத்தப்படுகின்றது என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பரீட்சையை வழமை போன்று யாழ்ப்பாணத்திலேயே நடத்தும்படி ஆஸ்பத்திரி நிர்வாகம், கடந்த மே மாதம் தொடக்கம் கொழும்பிலுள்ள உயரதிகாரிகளுக்கு கடிதம் எழுதியதாகவும் ஆனால் பயன் ஏற்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

ஒன்பது படை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

மன்னார் - மாந்தைப் பகுதியில் விடுதலைப்புலிகள் ஆயுதங்கள், மோட்டார்கள் சகிதம் படையினர் மீது தாக்குதல் நடத்த முயன்றதாகவும் -

படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் விடுதலைப்புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்தனர் எனவும் -

ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஐ-7)

தலையாழிப்பகுதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாமையாளர் க.சுதர்சன் ஆகியோரும் அடங்குவர்.

இவர்களின் உறவினர்கள் தம்மிடம் முறையிட்டதை அடுத்து இவர்கள் குறித்து தாம் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுடன் பல தடவைகள் தொடர்புகொண்டு பேசியதாகவும் -

கைதாகித் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்கள் இன்று (வியாழன்) காலை 10 மணியளவில் தாவடி படை முகாமில் வைத்து கிராம சேவையாளர்கள் முன்னிலையில் விடுவிக்கப்படுவர் எனத் தமக்கு உறுதி கூறப்பட்டதாகவும்-

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் தெரிவித்தார். (உ)

ஐ.தே.கவுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புச் சீர்திருத்தம் தொடர்பாக நாம் அரசுடன் கண்டுள்ள இணக்க யோசனைப்படி உத்தேச சீர்திருத்தத்தில் பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் ஏதும் கொடுக்கப்படவில்லை ஏனவும் அரசுத் தரப்புச் செய்யும் விஷமப் பிரசாரத்தின் நோக்கம், இந்தப் பேச்சுக்களில் இருந்து ஐ.தே.கட்சியை வெளியேற்றுவேயாகும்.

எஞ்சியுள்ள விடயங்களை ஐ.தே.கட்சியுடன் பேச அரசு விரும்பவில்லை. எனவே எம்மீது விஷமப் பிரசாரத்தை கட்டவிழ்த்துவிட்டு அதன் மூலம் பேச்சுக்களில் இருந்து எம்மை வெளியேற்ற அரசு திட்டமிட்டுச் செயலாற்றுகின்றது. அதற்கு நாம் இடங்கொடுக்கக்கூடாது.

இணக்கம் காணப்பட்ட விடயங்களை மகாசங்கத்துக்கு உடன் அனுப்பும்படி நான் அரசைக் கேட்டுக்கொண்டேன். அதற்குச் சம்மதித்த அரசு இன்றுவரை அதனைச் செய்யவில்லை. எனவே உடனடியாக அதனை மகாசங்கத்தினருக்கு அனுப்பிவைக்கும்படி அரசை வேண்டுகின்றேன்"

- இப்படி அவர் தெரிவித்தார். (உ-4)

அரச ஊழியர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே கண்டிப்பகுதியில வைத்து கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படும் இருவர் கொடுத்த தகவல்களின் பேரிலேயே இந்த மூவரும் கைதுசெய்யப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

அமைச்சர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்படும் கார்களை இங்கு விற்பனை செய்தால் அதன் மூலம் இங்கு கிடைக்கும் பணத்தை தேர்தல் செலவுகளுக்குப் பயன்படுத்தலாம். இதனை நோக்கமாகக் கொண்டே அரசு இந்நடவடிக்கையை எடுப்பதாகக் கூறப்படுகின்றது.

விரைவில் நடைபெறவுள்ள தேர்தல் சூழ்நிலையில் - நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் - தங்கள் நிதி நிலைமையைப் பாதுகாக்க விரும்பும் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்களே இதனை நடைமுறைப்படுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாக பி.பி.ஸி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-4)

மண்டலங்களின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற ஆட்சி முறையே இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்று தலைவர் சிவசிதம்பரம் கருதுகின்றார்.

"இனப்பிரச்சினைத் தீர்வுதொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ.தே.கட்சியும் கண்டுள்ள இணக்கத்தைத் தாம் முற்றாக எதிர்ப்பதாக தலைவர் சிவசிதம்பரம் கூறியுள்ளார்.

"வடக்கு - கிழக்கு இணைப்புக்கு கருத்துக் கணிப்பு நடத்தும் திட்டத்தையும், நாட்டின் ஆட்சி முறையின் வடிவம் குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ள முடிவுகளையும் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக அவர் கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு எந்தவித நிபந்தனையும் இன்றி நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே தலைவர் சிவாவின் முடிவாகும்.

- இப்படி வீ.ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்தார். (உ)

பௌதிகவியல்
பிரத்தியேக வகுப்புகள்
கோயில் வீதி,
நல்லூர்
(G.T.Zக்கு அண்மையில்)
வெப்பவியல்
Mon., Tue: 3.30 - 4.30
புலங்கள்
(ஈர்ப்புப்புலம்)
Mon., Tue: 4.30 - 5.30
திரு. M. கருணாநிதி
B.Sc. (Spe.) (76572)

புதிய வீடியோ CD
வெளியீடு
வடிவேலு – விவேக்
ஹரன் – நாசர்
குஷ்பூ – ரோஜா
நடித்த
வி. சேகரின்
கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை
ரமேஸ் அரவிந் – மஞ்சு
நடித்த
நதியோர கீதங்கள்
வீடியோ வீமல்
யாழ்ப்பாணம்.
(C/12272)

பால்தக்கரே கைதாகும் நிலை:

மத்திய அமைச்சர்கள் மூன்று பேர் ராஜினாமா

மும்பை,ஜுலை20

சிவசேனைத் தலைவர் பால்தக்கரேயைக் கைதுசெய்து அவர் மீது வழக்குத் தொடுப்பது என்று மகாராஷ்டிரா அரசு முடிவு செய்ததை அடுத்து -

மத்திய அரசில் இடம்பெறும் சிவசேனைக் கட்சியைச் சேர்ந்த மூன்று அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர். எனினும் இவர்களின் ராஜினாமாக்களை பிரதமர் வாஜ்பாய் ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுரேஸ் பிரபு, மனோகர் ஜோஸி, பாலசாந்தி திருபாதி ஆகிய மூன்று அமைச்சர்களுமே பதவி விலகியோராவர்.

எட்டு ஆண்டுகளுக்கு முன் அயோத்தியில் பாபர் மசூதி இந்து அடிப்படைவாதிகளால் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சிவசேனைத் தலைவர் பால்தக்கரே மற்றும் இரண்டு மத்திய அமைச்சர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மும்பாயில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலவரங்களில் தொடர்பு கொண்டிருந்ததாக தக்கரே மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது.

தக்கரே கைதுசெய்யப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் மும்பையில் சிவசேனைத் தொண்டர்கள் வன்முறைகளில் இறங்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (ஐ-4-7)

மறுக்கின்றார்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுஅதற்கு உட்பட மறுத்துவிட்டது. புலிகளுடன் பேசமுடியாது; பேசப்போவதேயில்லை" என்று அப்போது இந்த அரசுதான் கூறியது. ஆனால் அது இன்று என்ன செய்கின்றது? நோர்வே மூலமாகப் புலிகளுடன் இரகசியமாகப் பேசுகின்றது.

"நோர்வே ஊடாகப் புலிகளுடன் பேசும் அரசு மற்றொருவர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முக மாகப் புலிகளுடன் பேசுவதில் எப்படித் தவறு கண்டுபிடிக்க முடியும்?"

- இவ்வாறு அங்கு உரையாற்றும் போது ரணில் குறிப்பிட்டார். (உ)

அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை20

அண்மைக்கால யுத்த சூழ்நிலையினால் இடம்பெயர்ந்து யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட பாடசாலைகளின் அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கேட்டுள்ளார். (ஐ-10)

இளைஞர் சுட்டுக் கொலை

வவுனியா மாவட்டம் - மகாரம்பைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அறிவித்தல்

வெளிநாடு (கனடா, லண்டன்) சென்றுள்ள ஈச்சமோட்டை, பாற்குளம் வாசிகளான யோசப் றீட்டா, அன்ரன், குயின்ரன், சுகந்தினி, மாலினி, றஞ்சன், றஞ்சினி, ஜெயந்தன், சுமதி ஆகியோரது வெளிநாட்டு முகவரி தெரிந்த உறவினர்கள் தயவுசெய்து அம்முகவரியை எமக்குத் தந்துதவ எம்முடன் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு:

அ.குமார் (சிம்லிகுமார்)
சதீஸ்குமார்,
455, ஸ்ரான்லி வீதி,
ஆயுர்வேத பயிற்சிக் கல்லூரி அருகில்,
யாழ்ப்பாணம்.

(76553)

The Barbara Mulvaney
Computer Training Center

123, Temple Road, Jaffna

எமது கணனிப் பயிற்சி நிறுவனத்தின் செய்முறை, விரிவுரை வகுப்புக்கள் யாவும் 123, Temple Road, Jaffna என்னும் விலாசத்தில் நடைபெற்று வருகின்றன.

பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்து கொண்ட மாணவர்களுக்கான பரீட்சைகள் யாவும் 12.08.2000 முதல் ஆரம்பமாகவுள்ளதால் பரீட்சை அனுமதி அட்டைகளை 10.08.2000க்கு முன்னர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

புதிய கணனிப் பயிற்சிநெறிகள் யாவும் 22.07.2000 அன்று ஆரம்பிக்கப்படுவதால் புதிதாக சேரவிரும்பும் மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

குறுகிய காலத்தில் கற்கைநெறிகளை பூர்த்திசெய்ய விரும்புவோரின் வசதிக்கேற்ப பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் Computer Type setting (Lazer printing, Colour printing & Stencil cutting) சம்பந்தமான அனைத்து வேலைகளும் செய்து கொடுக்கப்படும். எம்மிடம் Type setting செய்ய ஒப்படைத்தவர்களும் மேலுள்ள விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

குறிப்பு:
எமது கல்வி நிறுவனத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட (UNDP) செயல்திட்டத்தின் கீழ் 1999ஆம் ஆண்டு இலவசமாக கணனிப் பயிற்சியை முடித்துக் கொண்ட, சான்றிதழ் பெறாத 2ம் பிரிவு மாணவர்கள் எம்முடன் உடன் தொடர்புகொள்ளவும்.

(C/12255) -நிர்வாகத்தினர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-07-2000இல் அச்சி[illegible]